
# சுதந்திரன்
SUTANTIRAN

வ- ஆ. 2001, வைகாசி 7 உ வியாழன் (21-5-70) ற. அவ்வல் பிறை 14 —புத்தகம் 24 இதழ் 42


# பொன்னு புரட்டை நிறுத்து!
# உன் முகமூடி கிழிகிறது!

## தமிழரசின் சாதனை பாரீர்!

தமிழரசுக் கட்சியினர் எதைச் சாதித்து விட்டனர் என்று கேட்கும் கருத்துக் குருடர்களே! மேலேயுள்ள படத்தைப் பாருங்கள்! இந்தப்படம் 1957ம் ஆண்டு பண்டா செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து யூ.என்.பி. வெளியிட்ட முதலடி (First step) என்னும் புத்தகத்திலுள்ள படமாகும்.

இந்தப்படத்தைப் போட்டு பணடா—செல்வ ஒப்பநதப்படி சிங்களம் மட்டும் சட்டம் எவ்விதம் செயலிழந்து விடுகிறது என்பதை அப்புத்தகத்தில் யூ. என். பி. சித்தரித்ருந்தது. முதலாவது இலங்கைப் படம், சிங்களம் மட்டும் சட்டத்தின் கீழ் உள்ள நிலையென்றும், பண்டா—செல்வா ஒப்பந்தப்படி தமிழ் வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆட்சிமொழியாக்கப்பட்டபின், சிங்களம மட்டும் நிலை எப்படி சிதறிப் போகுமென்பதையும் யூ.என் பி. படம் போட்டுக் காட்டி சிங்கள வெறியைத் தூண்டி விட்டது.

சிங்களம் மட்டும் சட்டப்படி 9 மாகாணங்களிலும் சிங்களம் மட்டும் ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்றும் ஆனல் ப. செ. ஒப்பந்தப்படி 2 மாகாணங்களில் தமிழ் ஆட்சிமொழியாகிவிடுமென்றும், 7 மாகாணங்களில் மட்டுமே சிங்களம் ஆட்சிமொழியாக இருக்குமென்றும் பிரச்சாரம்

(4-ம் பக்கம் பார்க்க)

## சிறிமா—சாத்திரி ஒப்பந்தம் பற்றி பாராளுமன்றத்தில் கூறியதென்ன?

(நமது நிருபர்)

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும் அவரது இரு சிவசிதம்பரங்களும் ஏனைய பக்க வாத்தியங்களும் வடக்கே நடக்கும் ஒவ்வொரு தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் சுதி தவருமல், 1967ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை ஆதரித்ததன் மூலம் தமிழரசுக் கட்சி, மலைநாட்டுத் தமிழர்களுக்கு பாரிய துரோகம் செய்துவிட்டதாகவும் ஐந்தே கால் லட்சம் பேரை கட்டாயமாக நாடு கடத்த உடன்பட்டுவிட்டதாகவும் இது மாபெரும் கொடூரமானதென்றும மேடைக்கு மேடை முதலைக் கண்ணீர் வடித்து வருகிருர்கள். அதுமட்டுமன்றி 1948ம் ஆண்டு ஆதரித்த பிரஜாவுரிமைச் சட்டங்களை விட தமிழரசார் ஆதரிந்த சட்டம் ஆபத்தானது என்று பிதற்றி வருகிருர்கள். திரு. பொன்

[4-ம் பக்கம் பார்க்க[



## டெய்லிமிறர் செய்திக்கு செல்வா மறுப்பு!

தமிழரசுக் கட்சிக்கும் இடதுசாரி கூட்டணிக் கட்சிகளுக்குமிடையே இரகசிய பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக டெயிலி மிறர், டைம்ஸ் ஆப் சிலோன் ஆகிய பத்திரிகைகள் இம்மாதம் 19ம் திகதி வெளியிட்டிருந்த செய்தியில் கொஞ்சம் கூட உண்மையில்லை. தமிழரசுக் கட்சிக்கும் வேறு எந்தச் சிங்களக் கட்சிகளுக்குமிடையே இதுவரை எவ்வித பேச்சுவார்த்தைகளும் நடைபெறவில்லை.

—இவ்வாறு தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகம் சுதந்திரனுக்கு தெல்லிப்பழையிலிருந்து தொலைபேசிமூலம் தெரிவித்துள்ளார்.

(2ம் பக்கம் பார்க்க)

## வாக்கு வேட்டையில் ஆசிரியர்கள் !

(உடுப்பிட்டி நிருபர்)

உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்த புலோலியில் கல்லூரி அதிபர்களும் ஆசிரியர்களும் ஒரு அரசியற் கட்சி வெட்பாளருககாக வீடு வீடாகச் சென்று வாக்குப் பிச்சை கேட்கிருர்கள். குறிப்பிட்ட அபேட்சகரும் இவர்களுடன் கூடவே போகிருர். தேர்தல் சட்ட திட்டங்களைக் கௌரவிக்க வேண்டிய பொறுப்பு வாய்ந்தவர்களே இப்படி முன் மாதிரியாக நடந்து கொள்கிருர்கள். எதற்கும் பயப்படவேண்டாமென்று

(4-ம் பக்கம் பார்க்க)

## மறவர் குலத்தின் பெருமை காத்திடும் மாண்புமிகு தலைவர் செல்வநாயகம்!

### தமிழரசுத்தந்தைக்கு தி.மு.க.ஏடு மாலை மணி சூட்டும் புகழாரம்!

சிங்களத் தீவை சிறப்பாக்கியது, சீராக்கியது தமிழன்! சிங்களத் தீவை வளமாக்கியது வனப்பாக்கியது தமிழன்! அவனுக்கு அங்கே வாழ்வில்லை. வளமில்லை குடியிருக்க உரிமையும் இல்லை.

இலங்கைத் தீவில் — தமிழர்களுக்கு வாழ்வில்லை, வளமில்லை என்பதோடு அவனுக்கு பாதுகாப்பும் இல்லை. அவனது உயிருக்கோ உடமைக்கோ ஏதும் உத்தரவாதமும் இல்லை.

சிங்கள அரசாங்கம் கொடுமைப்படுத்துகிறது.

இலங்கைத் தீவில் இயங்கி வரும் தமிழரசுக் கட்சியும் பண்புள்ள தலைவர் செல்வநாயகத்தின் பணியும்தான் நமக்கெல்லாம் கொஞ்சம் மன ஆறுதல்களை அளிக்கின்றன! அவரது பணியால் தான் இலங்கைத் தமிழர்களும் கொஞ்சம் நிம்மதியோடு வாழ்கின்றனர் என்ருல் அது மிகையாகாது!

(4ம் பக்கம் பார்க்க)



## டாக்டர் நாகநாதன் குணமடைகிருர்


கோண்டாவில், மே 18 கடந்த ஒருவாரகாலமாக டாக்டர். இ. எம். வி. நாகநாதன் அவர்கள் யாழ் அரசினர் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை பெற்று வருகின்ருர். நாடியில் உள்ள ஒரு கட்டியை அகற்றுவதற்காக டாக்டர்கள் அவருக்குச் சத்திர சிகிச்சை செய்தனர். தற்பொழுது டாக்டர் நாகநாதன் குணமடைந்து வருகின்ருர். ஏராளமான மக்கள் மருத்துவமனைக்குச் சென்று டாக்டர் அவர்களை குசலம் விசாரித்து வருகின்ருர்கள். இன்னும் ஓர் இரு தினங்களில் நாகநாதன் அவர்கள் மருத்துவமனையை விட்டு வெளியேறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாகநாதன் அவர்கள் மருத்துவமனையில் இருக்கும் பொழுதும் அவருடைய வெற்றிக்காக இளைஞர் தொடக்கம் முதியோர்வரைக்கும் வாக்காளருடைய இல்லங்களுக்குச் சென்று அவர்களைச் சந்தித்தும், ஆங்காங்கே பிர

(2-ம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு பெரிய ஊறணி பகுதியில் நடைபெற்ற தமிழரசுப் பிரசாரக் கூட்டத்தில் மட்டுநகர் முடிசூடா மன்னன் — எழில் தமிழாளர் செ. இராசதுரை உணர்ச்சியுடன் உரையாற்றுவதையும் செல்வி காஞ்சனதேவி அழகு தமிழில் பேசுவதையும், இக்கூட்டத்திற்கு திரண்டுவந்திருந்த தன்மானத் தாய்க்குலத்தின் ஓர் பகுதியையும் படத்தில் காண்க.

(படம்: 'இதயம்')



இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

# எண்ணம்

## தமிழரசுக்கட்சியார் என்ன செய்தார்கள்?

தமிழரசுக்கட்சியார் கடந்த 14 ஆண்டுகளாக எதைச் சாதித்து விட்டார்கள்? இப்படியொரு கேள்வி தேர்தல் பிரசாரக் கூட்டங்களிலெல்லாம் எழுப்பப்படுகிறது.

இந்தக்கேள்வியைக் கேட்பவர்கள்—தமிழினத்தின் உரிமைகளை மீட்க தமிழரசுக்கட்சி நடத்திய போராட்டங்களின் போதெல்லாம் தோளோடு தோள் நின்று போராடியவர்களா? தமிழரசுக்கட்சி எடுத்த நடவடிக்கைகளுக்கு தமது பூரண ஆதரவைத்தந்து ஒத்துழைத்தவர்களா? கிடையவே கிடையாது.

தமிழரசுக்கட்சி நடாத்திய உரிமைப் போராட்டங்களின் போது ஐந்தாம்படை வேலை பார்த்தவர்கள்—தமிழரசுக்கட்சியின் முயற்சிகளுக்கெல்லாம் தொடர்ந்து முட்டுக்கட்டை போட்டு வந்தவர்கள்—தமிழினத்தின் உரிமைகள் பலவற்றை மீட்கும் சந்தர்ப்பம் தமிழரசுக்கட்சிக்கு ஏற்பட்டபோதெல்லாம் எதிரணியில் நின்று அந்த வாய்ப்புக்களைக் குழப்பிக் கொட்டியவர்கள் தாம் தமிழரசுக்கட்சி என்ன செய்துவிட்டது என்ற கேள்வியை மேடைதோறும் நெஞ்சை நிமிர்த்தி முழியை உருட்டிபுரட்டி கேட்டு வருகிறார்கள்.

1956ம் ஆண்டுக்கு முன்பு, ஒத்துழைப்பு போர்வையுடன், யூ. என். பியிடம் சரணாகதியடைந்து தங்கள் சுகபோகங்களை அனுபவித்து முழு மந்திரிகளாகவும், அரைகால் மந்திரிகளாகவும், பவனிவந்து தமிழினத்தின் உரிமைகளை அடகு வைத்தவர்கள்—தமிழ் இனத்தை சிங்கள ஏகாதிபத்தியம் கொலை செய்வதற்கு வாள் தீட்டிக் கொடுத்தவர்கள்—தமிழ் பேசும் மக்களை ஓராட்டிச் சீராட்டி உறங்க வைத்துவிட்டு, அவர்களுக்கு நஞ்சூட்டியவர்கள்—சிங்களவர்களின் எச்சில் இலையை நக்கி அதில் இன்பசுகம் கண்டவர்கள்—ஈழத் தமிழகத்தை திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தால் நிறைத்தவர்கள்—பட்டிப்பளையும் அல்லையும், கந்தளாயும், பதவியாவும், மூதூரும் சிங்களமயமாகக் காரணமாக இருந்தவர்கள்—பெரிய சேனநாயகாவுக்கும் டட்லிக்கும் சேர் ஜோனுக்கும் கால்பிடித்துவிட்டு பதவியெனும் 'மோட்ச' சுகம் அனுபவித்தவர்கள்—10 இலட்சம் மலையகத்தமிழர்களை நாடற்றவராக்கி, அரசியல் அனாதைகளாக்கியவர்கள்—சிங்கக் கொடியை ஏற்று தமிழினத்துக்கு சிறுமை சேர்த்தவர்கள்—சோல்பரி ஒற்றையாட்சியை ஏற்று தமிழினத்தை சிங்களவர்களுக்கு மீளா அடிமையாக்கியவர்கள்—சிங்களம் மட்டும் சட்டத்துக்கு நிலபாவாடை விரித்து வைத்தவர்கள்—இப்படிப்பட்டவர்கள்தாம் தமிழரசுக்கட்சிமீது இன்று கேள்விக்கணை தொடுக்கிறார்கள்.

யார் இவர்கள்? இவர்கள்தாம் திரு. பொன்னம்பலம், குமாரசாமி, சுந்தரலிங்கம் போன்றவர்களும் இவர்களுக்கு அடிவரும் கும்பல்களும்! இவர்கள்தாம் பதவிப் பித்தம் தலைக்கேறி 1956ம் ஆண்டுக்கு முன் தமிழினத்தின் உரிமைகள் என்ற சேலையை, ஒற்றை ஆட்சி என்ற முள்ளில் சிக்கவைத்தசூராதிசூரர்கள்—இந்த நாசகாரர்களினால்தான் தமிழினம் இந்நாட்டில் தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டு பாழ்பட்டு நிற்க நேரிட்டதென்பதை தமிழ் பேசும் மக்கள் என்றுமே மறக்கமுடியாது. ஏனெனில் வரலாற்றில் இடம் பெற்றுவிட்ட உண்மை இது.

இந்தப்பதவிப் பித்தர்களின் மாயவலையிலிருந்து விடுபட்ட ஈழத்தமிழினம் 1956ம் ஆண்டுதான் தனது தலைமைப் பொறுப்பை தமிழரசுக்கட்சியிடம் கையளித்தது. அன்றுமுதல் தமிழரசுக்கட்சி ஒற்றையாட்சி அரசியலமைப்பு என்ற முள்ளில் சிக்கிவிட்ட தமிழினத்தின் உரிமைகள் எனும் சேலையை சிறிது சிறிதாக விடுவிக்க முயன்று வருகிறது. சேலை கிழிந்துவிடாதபடி கட்சி எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் நடந்துவருகின்றது.

1956ம் ஆண்டுக்குப் பின்னர், இந்நாட்டு அரசியலில் தமிழரசுக் கட்சியார் என்ன சாதித்தார்கள் என்பது தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல, அகில உலகமுமே அறிந்த உண்மையாகும். தமிழ் பேசும் மக்களை பிரதேச, மத வேறுபாடு கடந்த ஓர் தேசிய சிறுபான்மை இனமாக ஒன்றுபடுத்தி இன ஒற்றுமையை இறுக்கமாகக் கட்டியெழுப்பினார்கள்—1956—1965 இடைப்பட்ட காலத்தில் சத்தியாகிரகம், சட்டமறுப்பு, மறியல் போராட்டம் போன்ற இயக்கங்களை இலங்கையிலே முதன் முதலாக வெற்றிகரமாக நடத்திக் காட்டினார்கள்—அடிபட்டு உதைபட்டு இரத்தம் சிந்தினார்கள்—எண்ணற்ற துன்பங்களை, வேதனைகளைத் தாங்கிக் கொண்டார்கள்—நான்கு பெருந் தலைவர்களையும், நல்ல பல தொண்டர்களையும் பலிகொடுத்தார்கள்—தமிழுக்காக எதையும் தியாகம் செய்யத்தயாரான இளைஞர் பட்டாளத்தை உருவாக்கினார்கள்—சட்ட மேதைகள் எல்லாம் சட்டத்தை மீறி சிறைசென்றார்கள்—தனித் தமிழ் முத்திரைகளை வெளியிட்டு சட்டத்தை மீறி ஒரு புதிய வரலாற்றை படைத்தார்கள்—சிங்கள ஏகாதிபத்தியம் இரு திங்களாக தமிழ் பிரதேசத்தில் இயங்கமுடியாதபடி தடுத்து நிறுத்தி தமிழினத்தின் வலிமையை நிலைநாட்டினார்கள்—திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை தமிழ் பகுதியில் நடைபெறாதவாறு தடுத்துநிறுத்தினார்கள்—வடக்கும் கிழக்கும் தமிழினத்தின் தாயகம் என்பதை சிறீலங்கா சுதந்திரக்கட்சியும், யூ என். பியும் எழுத்துமூலம் ஒப்புக்கொள்ளும்படி வைத்தார்கள்—சிங்களம் மட்டுமே ஒன்பது மாகாணங்களிலும் ஆட்சிமொழி என்று வீரம் பேசிய சிங்கள ஏகாதிபத்தியத்தை பணிய வைத்து வடக்கிலும், கிழக்கிலும் சிங்களத்துடன் தமிழும் ஆட்சி மொழியெனும் நிலையை ஆக்கிவைத்தார்கள்—தமிழ் பேசும் மக்கள் ஒன்றுபட்டு ஒரே சக்தியாக நின்றால் அவர்களை அழித்துவிட யாராலும் முடியாது என்பதை நிலைநாட்டினார்கள் — சிறுபான்மை மக்களின் ஆதரவின்றி சிங்கள ஆட்சி நிலைக்க முடியாதென்பதை நிரூபித்துக்காட்டினார்கள் — தமிழினத்துக்கு பாதகம் செய்ய முனைந்த சிங்கள ஆட்சிகளை அரச கட்டிலிலிருந்து துரத்தியடித்தார்கள்—தமிழ் பேசும் மக்களை ஒழித்துக்கட்டுவோம் என்று புறப்பட்ட சிங்களக்கட்சிகளை தமிழ் பேசும் மக்களின் காலில் விழவைத்தார்கள்—இப்படி எத்தனையோ சாதனைகளை செய்தவர்கள் தமிழரசார்.

இதை யெல்லாவற்றையும் விட தமிழ் பேசும் மக்கள் தமது பிரதேசத்தில் தமது சொந்த ஆட்சியை நிறுவி சுயாதீனமுள்ள சுதந்திர மக்களாக வாழவேண்டுமென்ற சுதந்திரத் தீயை தமிழுள்ளங்களிலெல்லாம் மூட்டிவிட்டிருக்கின்றனர் தமிழரசார். இந்தப் புனிதமான—மகத்தான இலட்சியத்தை நோக்கி தமிழரசு வீரர்கள் அணிவகுத்து செல்கின்றனர்—இத்தகைய விடுதலை இயக்கமான தமிழரசுக்கட்சியை நோக்கித்தான் தூர நின்று ஊளையிடுகின்றன அரசியலில் வாலறுந்த நரிகள்—

தமிழரசார் என்ன செய்தனர் என்று கேட்கும் இவர்கள் தமிழினத்துக்காக தாம் என்ன செய்தார்கள்? பாராளுமன்றத்துக்குச் சென்று சுளைசுளையாக சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, ஐ. நா. சபைக்கு உல்லாசப்பயணம் சென்று, தங்கமாலை பெற்றுக் கொண்டதன்றி தமிழுக்காக இவர்கள் ஒரு துரும்பைத்தானும் தூக்கிப்போட்டதுண்டா? தாமுண்டு தம்குடும்பமுண்டு, தொழிலுண்டு என்று சுயநலமிகளாய், சோற்றுத் துருத்திகளாய் சிங்கள ஏகாதிபத்தியத்தின் கங்காணிகளாய் வாழ்ந்து வரும் இத்துரோகிகளை தமிழக அரசியலிலிருந்து அடித்துத் துரத்தாதவரை தமிழினத்துக்கு வாழ்வில்லை; வளமில்லை; நலமில்லையென்று திடமாக கூறவிரும்புகிறோம். மே 27ல் தமிழினம் கச்சிதமாக இந்த வேலையைச் செய்து முடிக்கும் என்று உறுதியுடன் நம்புகிறோம்.

---

தமிழரசுப் படைவீரர்வரிசை (11)

## அடலேறு ஆலாலசுந்தரம்



எந்த ஒரு விடுதலை இயக்கத்துக்கும் அடிக்கடி புதிய ரத்தம் செலுத்திக்கொண்டே இருக்கவேண்டும். அப்போதுதான் அந்த இயக்கம் தனது நீண்டபயணத்தையும் இலட்சியங்களையும், உணர்வுகளையும் மறவாது புதுத்தெம்புடன் இயங்கமுடியும். அந்த வகையில் தமிழரசுக் கட்சிக்குப் புதிய எழுச்சியையும், புதிய வீறையும், புதிய பரபரப்பையும் தந்து வயோதிபரையும் வாலிபராக்கி வருபவர்தான் திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்கள்.

இன்று இளைஞர்கள் 'ஆலாலு அண்ணை' என்று பாசத்தோடு கொண்டாடுகிறார்கள். இவரை ஈ. என். 545 வந்தால் அதற்குள்ளேயிருந்து ஒரு நேசக்கரம் நாம் பார்த்திருக்கும்போதே ஆயிரம் தடவைகள் வெளியே தெரிந்து தன் நட்பை பறைசாற்றும். அது திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்களின் கையைத்தவிர வேறல்ல.

புதிய கருத்துக்கள், புதிய சிந்தனைகள், புதிய எண்ணங்கள், புதியவாதங்கள், புதிய விளக்கங்கள் இவையெல்லாம் கலந்த ஒரு புதிய பாணி; கம்பீரத் தொனி, கவர்ச்சிகரமான நடைதான் மு. ஆ. வின் பேச்சுகள். அதனால்தான் தனிப்பெருந் தறு தலை(வர்)களுக்கே 'ஆலாலு' என்றால் தொடை ஆட்டம் 'எதிரிகளின் வண்டவாளங்களைப் பிய்த்தெறிய வேண்டுமா? கூப்பிடு ஆலாலுவை' என்று எல்லோரும் கூறும் இளைஞர் தலைவர் அவர்.

இன்று தமிழரசுக் கட்சியில் ஆலாலு 'சீசன்'தான். எங்கே கூட்டமென்றாலும் பெரியவர்கள் 'ஆலாலு தம்பி வருதோ' என்கிறார்கள், வாலியர்கள் 'ஆலாலு அண்ணை வருவாரா' என்கிறார்கள்.

திரு. ஆலால சுந்தரம் அறிஞர் அண்ணா மீது மாறாத பக்தி கொண்டவர். அவர் அண்ணாவின் வழியில் நாடகம் எழுதுவார், நடிப்பார், டைரக்ட் பண்ணுவார், அரசியல் பேசுவார், இனத்துக்காகப் பாடுபடுவார். இழிந்தோரின் குள்ளநரித்தனத்தை வேட்டையும் ஆடுவார், அவர் ஒரு 'ஜீனியஸ்'.

ஆலாலு அமரர் வன்னிய சிங்கத்தால் உருவாக்கப்பட்டவர். அதனாலேயே அந்த விடுதலையுணர்ச்சி, வீரவேட்கை, சுதந்திர தாகம் இவரின் ரத்த நாளங்களிலெல்லாம் பீறிட்டுப் பாய்கின்றது.

திரு. ஆலால சுந்தரம் ஒரு தொழிற்சங்கவாதி. வடமாகாண பஸ் தொழிலாளர் கழகம் இத்தனை சீரும் சிறப்புமாக இயங்கிக் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு இயங்குகிறதென்றால் காரணம் அது துடிப்புமிக்க ஆலால சுந்தரம் அவர்தம் தலைமையைப் பெற்றதே.

இவர் ஒரு நியாயவாதி. சட்டம் பயின்றவர். இளைஞர். கிளிநொச்சி மக்கள் இவரைப் பொன் போலப் போற்றுகின்றார்கள். விலைமதிப்பற்ற வைரத்தின் மதிப்பு அதன் ஒளியிலிருந்தே தெரிவதைப்போல, திரு. ஆலாலசுந்தரத்தின் இதயநாதம் அவர் முகத்தின் தேஜஸிலிருந்தே துலங்குகிறது.

இதனாலெல்லாம் அவர் தமிழரசு வேட்பாளனாகப் போட்டியிட முன்வரவில்லை. அவரை தமிழரசு இயக்கத் தோழர்களும், தலைவர்களும் போட்டியிடத்தான் வேண்டும் என்று அன்புக் கட்டளையிட்டு கிளிநொச்சியில் நிறுத்தியுள்ளனர். காரணம் அப்பிரதேச மக்களை வழிநடத்தக் கூடிய கடமையுணர்வு கைவரப்பெற்றவர் அவர் தான்.

---

## கட்டாய நாடு கடத்தலுக்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றிருக்கும் நிலையைக் கவனிப்போம். அவர்கள் தலைகீழாக நின்றால் சில சம்பவங்கள் நிகழலாம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8வது அம்சத்தைச் சுருக்கிக் கூறுகிறேன்.

திரு. இராசமாணிக்கம்: முழுவதையும் வாசியுங்கள்.

திரு. பொன்னம்பலம்: இதுதான் அது.

'இந்த அரசமைப்புத்திட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரோ இந்திய டொமினியன் அரசாங்கத்தினால் அல்லது இந்திய அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட மாதிரியிலும் வகையிலும் வரையறுக்கப்பட்ட வகையில் இந்தியாவிற்கு வெளியேயுள்ள ஒருநாட்டில் அந்தக் காலத்திற் சாதாரணமாக வதியும் ஆள் ஒருவர் அந்த நாட்டிலுள்ள ஒரு ஒருவர் அந்த நாடடிலுள்ள ஒரு இந்திய ராஜீய அல்லது கான்சுலர் பிரதிநிதிக்குச் செய்து கொள்ளும் ஒரு விண்ணப்பத்தின் மீது இந்தியக் குடிமகனாகப் பதிவு செய்துகொள்ளப்பட்டால் அவர் ஓர் இந்தியப் பிரஜையாகக் கணிக்கப்படுவர். இவ்வாறான ஒருவரின் பெற்றோரில் ஒருவரே பேரன் பேத்தியில் எவரேனும் ஒருவரோ, 1935ம் ஆண்டின் இந்தியாச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டபடி, பிறந்திருக்க வேண்டும். இந்தப் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை 5ம் பிரிவிலுள்ள எந்த வாசகமும் கட்டுப்படுத்தாது.

எனவே இதிலிருந்து தெரிந்து கொள்க, ஒருவர் இந்தியாவிற் பிறந்திருந்தால் அல்ல பெற்றோர்களில் ஒருவரோ 4 பேரன் பேத்திகளில் ஒருவரோ இந்தியாவிற் பிறந்திருந்தால், சாதாரணமாக இந்தியாவிற்கு வெளியே வாழும் ஒருவர் தான் வாழும் நாட்டிலுள்ள இந்திய இராஜீய அல்லது கான்சுலர்ப பிரதிநிதிகட்கு மனுப்பண்ணுவதின் மூலம் இந்தியக் குடியுரிமை பெற்றுக் கொள்ளலாம்; வேறு வழிகளில் இந்தியக் குடியுரிமை பெற இயலாது.

[997ம் பந்தி] திரு. பொன்னம்பலம்: இது ஒன்றை மாத்திரம் கூறுகிறேன்: ஒருவரின் விருப்பத்திற்கு மாறாக எவரும் அவரை ஒரு நாட்டின் குடிமகனாக்கி விட முடியாது!'

---

### டாக்டர் நாகநாதன்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாரக் கூட்டங்களை நடாத்தியும் வருகின்றார்கள். பறங்கிமலைத்தொகுதியில் மக்கள் திலகம் எம். ஜி. ஆர். அவர்கள் எப்படியாக மருத்துவமனையில் படுத்திருந்து பல்லாயிரக்கணக்கான வாக்குகளால் வெற்றியீட்டினாரோ அதேபோல் குட்டிப் பறங்கிமலைத்தொகுதியான நல்லூரிலே டாக்டர் நாகநாதன் அவர்கள் மருத்துவமனையில் இருந்து கொண்டே வெற்றியீட்டப்போகின்றார் என்று துடிப்புமிகு இளைஞர்கள் பேசிக் கொள்கின்றார்கள்.

---

### டெய்லிமிறர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தொகுதியில் போட்டியிடும் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலத்தின் நிலை இறக்குமுகமாக இருப்பதால், திரு. பொன்னம்பலத்துக்கு சில பகுதியினரின் ஆதரவைத் தேடிக் கொடுக்கும் நோக்குடனேயே டெயிலி மிறர் இக்கட்டுக்கதையை திட்டமிட்டுப் பரப்பி வருவதாகவும் கடந்த (1965) பொதுத் தேர்தலின் முன்பும் இப்படிப்பட்ட கட்டுக் கதையொன்றை டெயிலி மிறர் பரப்பியதாகவும், இத்தகைய பொய் பிரசாரங்களில் யாழ் தொகுதி வாக்காளர்கள் ஏமாறக்கூடாதென்றும். யாழ் தொகுதி தமிழரசு வேட்பாளர் திரு. சி. எக்ஸ். மார்ட்டின் தெரிவித்தார்.

## இலங்கை—இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தில்

# கட்டாய நாடுகடத்தலுக்கு அணுவளவும் இடமில்லை!

## விருப்பமற்ற எந்த மனிதரையும் இந்தியாவுக்கு அனுப்ப முடியாது!

## சிறிமா—சாத்திரி ஒப்பந்தத்தை ஆதரித்து பொன்னம்பலம் ஆற்றிய உரை!

தொகுதி 71
இலக்கம் 8
செவ்வாய்க்கிழமை 21 பெப்ரவரி 1967
(983 ஆம் பந்தியிலிருந்து)

திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம்:

"...இது இந்திய அரசாங்கத்தின் அக்கறைக்குரியதல்ல என்று கூறுவதாகாது. இதில் இவ்வளவு தூரத்திற்குக் கௌரவ தொம்பைப் பிரதிநிதி (திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க) வின் கூற்றுத் தவருனது — செய்து கொள்ளப்பட்ட (சிறிமாவோ சாத்திரி) ஒப்பந்தத்திற்கு நானும் எனது கட்சியும் எதிரிடையாகப் பேசியதில்லை. தயவு செய்து அதை வடிவாகத் தெரிந்துவைத்துக்கொள்ளுங்கள். ஆனல் குறித்த ஒப்பந்தம் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவியிடமிருந்து தாமதித்துத் தோன்றிய சிந்தனைகள் தொடர்பாக நாம் அளித்த பதிலே எமது தேர்தல் விஞ்ஞாபனத்திற் சுமார் மூன்று நான்கு மாதங்களுக்குப் பின்னர் நாம் குறிப்பிட்ட விடயமாகும்.

அக்டோபர் முடிவிலோ நவம்பர் ஆரம்பத்திலோ அன்று பிரதமராயிருந்த எதிர்க்கட்சித் தலைவி இந்தியாவிலிருந்து திரும்பி வந்ததும் அசாதாரணமான சில செய்கைகளிலீடுபட்டார். அந்த ஆண்டு நவம்பர் 10ந் திகதியாயிருக்கலாமென்று நினைக்கிறேன் — அவர் ஓர் அறிக்கையைவெளியிட்டார். கடந்த காலங்களில் இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் ஏற்பட்ட ஒப்பந்தங்களனைத்திற்கும் மேலாக ஒரு படி முன்னேறிக் கட்டாய நாடுகடத்தலுக்கு இந்தியப் பிரதமரை உடன்படும்படி செய்துவிட்டதாக அந்த அறிக்கையில் அவர் கூறியிருந்தார்.

இன்று அவர் அதை மறுத்துரைப்பார் என நான் நினைக்கவில்லை. அவர் கூறிய அதே வார்த்தைகளை நான் எடுத்துக் கூற முடியும். ஆனலும் அவரது கூற்றுப்பற்றிச் சரியான, நியாயமான சுருக்கம் ஒன்றினைக் கொடுத்திருக்கிறேன் என்றே நான் நம்புகிறேன்.

ஒப்பந்தத்திற்கு புறம்பான ஒரு விஷயத்தை இந்த அறிக்கை புகுத்துவதாயிருந்தது; ஒப்பந்தம் இங்கே எனது கைகளிலிருக்கின்றது. இந்த ஒப்பந்தம் முழுவதிலும் தடவிப் பார்த்தாலுங்கூடக் கட்டாய நாடுகடத்தலைப்பற்றிக் குறிப்பிடும் ஒற்றைச் சொல்லைத்தானும் காணமுடியாது.

தனி வாக்காளர் இடாப்பு என்ற புதிய முயல் ஒன்றையும் அவர் அன்று கிளப்பி விட்டார். இந்தியப் பிரதமருடன் நிகழ்த்திய கடிதப் போக்குவரத்துமூலம் இதைச் செய்தார். இந்த முயலின் விளைவாக அடுத்த மாதம்—திசம்பரில்—ஜா அவர்களும் அவர்களது சகாக்களும் இலங்கையின் நிரந்தர அரசாங்க அதிகாரிகளுடன் கூடிப்பேச விரைந்தார்கள். திரு. ஜா என்ன கூறினர்? இந்திய வெளி விவகார மா செயலதிகாரிக்கும் எதிர்க்கட்சித் தலைவிக்குமிடையே பாதகமற்று நடந்துகொள்ளும் வண்ணம நான் ஜா அவர்களின் அதேவார்த்தைகளையே கூறிவைக்கிறேன்—

"... மேன்மை தங்கிய இலங்கைப் பிரதமர் அவர்களின் சமீபகால அறிவித்தல்கள் இந்தியாவில் பெருமளவிலான மனக் கவலையையும் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் கிளறிவிட்டிருக்கின்றன. ஒப்பந்தத்திற் புல்லுருவி படரவும் விட்டிருக்கின்றன.

சுருங்கக் கூறுவதானல், முதலாவது: தனிவாக்காளர் இடாப்புப் பிரச்சினை, இரண்டாவது: வேலை வாய்ப்பைக் கட்டுப்படுத்தும் பிரச்சினை, அதாவது இந்தியக் குடியுரிமையைத் தேடிக்கொண்டு நாடுகடத்தலை எதிர்நோக்கியிருப்பவர்கள், ஒப்பந்தம் கையெழுத்தான சமயத்தில் வேலையற்றிருந்தால் நாடுகடத்தப்படும் வரை வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுதல், மூன்ருவது; இந்தியா, கட்டாய நாடுகடத்தற் கொள்கையை கற்றுக்கொண்டது என்ற கூற்று ஆகியவையே (திரு. ஜா, குறிப்பிட்ட இலங்கைப் பிரதமரின் சமீபகால) அறிவித்தல்களாகும்.

எனவே இன்று இந்தச் சபை அரங்கிலே, ஏதோ ஒரு ஒட்டைத் தர்க்கம் மூலம் எதிர்க்கட்சித் தலைவி நிறுவ முயலும் முடிவுகளைப்பற்றி நான் பெரிதும் ஆச்சரியப்படுகிறேன். காலஞ்சென்ற திரு. சாஸ்திரி தமது கடிதத்திற் கட்டாய நாடுகடத்தற் பிரச்சினைபற்றி எவ்விதமான வகையிலும் குறிப்பிடத் தவறியிருப்பதினல் இந்தியப் பிரதமர் கட்டாய நாடுகடத்தலுக்கு ஒத்துக்கொண்டு, ஒப்பந்தத்தை நடைமுறையாக்குவதில் ஓர் அடித்தளக் கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கிருர் என்று நிறுவுகிருர் எதிர்க்கட்சித் தலைவி. மூதவையில் நீங்கள் அந்தப் பேச்சை நிகழ்த்தி ஒரு மாதமாகு முன்னர், திசம்பர் 15ந் திகதி இந்தியப் பிரதமரின் மூத்த அதிகாரி ஒருவர் இங்கு வந்து அந்த அறிவித்தல்களை மறுதலித்திருக்கிருர். மறுதலித்திருப்பதற்கும் மேலே ஒரு படி போய் அவர், உங்கள் சாதுரியமற்ற உரைகளினல் உங்கள் சொந்த ஒப்பந்தம் நிறைவேற்றப் படுவதையே நீங்கள் சந்தேகத்திற்குட்படுத்திவிட்டீர்கள் என்று கூறியிருக்கிருர். எனவே இந்தியா எதையோ ஏற்றுக்கொண்டுவிட்டது என்று நீங்கள் நிறுவ முயலும் கூற்று உண்மையிலிருந்து வெகு தூரத்தில் நிற்கும் ஒன்ருகும்.

தனி வாக்காளர் இடாப்புப் போன்ற விஷயங்கள் திருப்திகரமான முறையிற் தீர்க்கப்படாவிட்டால், ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் என்பதற்கான உறுதி எதுவுமில்லை என இவ்வதிகாரி தொடர்ந்து கூறியிருக்கிருர். இந்தக் கூற்றுகள் மூலம் ஒப்பந்தம் பாறையில் மோதி விட்டதென்றே கொள்ள வேண்டும். ஏனெனில் இலங்கைக் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்படும் இந்திய மக்கள் இலங்கையில் இரண்டாந்தரக் குடிகளாகவோ, தாழ்ந்த நிலையிலுள்ள குடிகளாகவோ இருக்கவேண்டும் என்ற நிலையை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவோ இதில் இளகி நிற்கவோ முடியாத ஒரு உயிராதாரப் பிரச்சினை இது என்று திரு. ஜா கூறியிருக்கிருர். இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதிகளையும் அதிகாரிகளையும் பொறுத்தவரை இது பச்சையான, நேர்முகமான ஒரு பேச்சு.

சபாநாயகர் அவர்களே! இந்தப் பிந்திய கட்டத்திலாவது எதிர்க்கட்சித் தலைவியையோ அவரது எடுபிடியாளர்களையோ இந்த ஒப்பந்தம் அனைத்திலுமே கட்டாய நாடு கடத்தல்பற்றிக் குறிப்பிடும் ஏதாவது ஒரு வாசகத்தையேனும் கூறுங்கள் அல்லது தொட்டுக்காட்டுங்கள் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன் (985ம் பந்தியின் முடிவு)

[989-ம் பந்தியில்]

கேட்கிறேன் ஒரு கேள்வி! ஐயா சபாநாயகரே! ஒரு நாட்டிலிருந்து இன்னெரு நாட்டிற்கு ஒருவரை நாடு கடத்துவது எப்படி? சொந்த நாடல்லாத ஒரு நாட்டிற்கு ஒரு ஆளை நீங்கள் நாடு கடத்த முடியுமா? எத்தகைய ஆள் ஒருவரை நீங்கள் நாட்டிலிருந்து கடத்தி இன்னெரு நாட்டிற்கு அனுப்பி வைக்க முடியும்? தெரியுமா? ஒரு நாட்டில் வேண்டப்படாத இன்னெரு நாட்டின் குடிமக்களையே நீங்கள் நாடு கடத்தி அனுப்பி வைக்க முடியும். எந்த நாடும் நாடுகடத்துவது தனது குடிமக்களை அல்ல. தனது நாட்டில் வேண்டப்படாத இன்னெரு நாட்டின் குடிமக்களையே ஒரு நாடு நாடுகடத்துகிறது.

சபாநாயகர் அவர்களே! இவர்கள் நாடில்லாதவர்கள் என்ருல் நீங்கள் அவர்களைக் கட்டாய நாடுகடத்தலுக்கு உட்படுத்த முடியாது. இது எனது எடுத்துரைப்பு; உங்கள் ஒப்பந்தத்தில் எந்தவகையிலும் கட்டாய நாடுகடத்தல் என்ற பிரச்சினையே இல்லை. ஆனல் நாடுகடத்தப்படுதல் என்ற ஒரு அம்சம் உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுகிறேன். அதாவது செய்யப்படும் விண்ணப்பம் ஒன்றின்மீது இந்தியக் குடியுரிமை வழங்கப்படும் இந்திய வம்சாவழியினர் (மாத்திரமே) நாடுகடத்தலுக்கு உட்படுவார்கள். எதிர்க்கட்சித் தலைவி தனது பேச்சில்—நான் அவரது (சிங்களப்) பேச்சின் மொழி பெயர்ப்பைக் கவனமாக கேட்க முந்திபட்டேன் — கௌரவ தொம்பைப் பிரதிநிதியிலும் பார்க்கத் திறமையாகப் பேசியிருந்தார். ஏனெனில் இந்திய வம்சாவழியினர் இந்தியக் குடியுரிமை பெற்ற பின்னர் நாடுகடத்தலுக்கு ஆளாவார்கள் என்பதை ஏற்றுக் கொண்டார், அது உண்மைதான். இச்சட்ட மூலத்தின் 13ம் வாசகத்தில் உத்தேசிக்கப்பட்டிருப்பதும் அதுவேதான். [989ம் பந்தி முடிவு]

[990ம் பந்தியில்]

எதிர்க்கட்சித்தலைவி — சரியாகவே கூறினர். ஒருவரோ பலரோ இந்தியக்குடியுரிமைக்கு மனுப்பண்ணி இந்தியக் குடிமக்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டபின் தொடர்ந்து அவர்கள் நாடு கடத்தலுக்கு உட்பட்டு இந்த நாட்டிலேயே வசிப்பார்கள். உங்கள் ஒப்பந்தங் கூறுவதும் அதுதான். இந்தச் சட்ட மூலத்தின் 13ம் வாசகம் நிறைவேற்றமுயல்வதும் அதைத்தான். நான் சொல்வதெல்லாம் இதுவே. இந்தச் சட்ட மூலத்தின் கொள்கையற்ற, ஜனநாயகத் தன்மையற்ற போக்குப்பற்றி எனது உணர்ச்சிகள் எதுவாயிருந்தாலும், நாங்கள் இச்சட்ட மூலத்திற்கு மாருகப் போகவில்லை.


[995ம் பந்தியிலிருந்து]


நீண்ட பொறுமையற்ற 4 மணித்தியாலமாகப் பேசிய தொம்பைப் பிரதிநிதி (பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிற்கு)க்கு வருகிறேன். நீண்டு பேசிய அவர் இந்த ஒப்பந்தத்திற் கட்டாய நாடுகடத்தல் அடிப்படையானது, அவசியமானது, உடன் பிறந்தது என்று நிறுவப் பெரிதும் கஷ்டப்பட்டார். அவரது பேச்சுப்பற்றி நான் நியாயமாகவே நடந்து கொள்ளுகிறேன் என்றே நம்புகிறேன். அவர் சட்டத்தின் அடிப்படைகளை மறந்து நாடுகடத்தலுக்கு முன்னர் குடியுரிமை பிரச்சினை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று கூறியிருந்தார். 5 1/4 இலட்சம் மக்களை இந்தியா ஏற்றுக் கொள்ளச் சம்மதமாயிருந்தால் அத்துடன் பிரச்சினை அனைத்தும் தீர்ந்தது என்று திட்டவட்டமாகவே அவர் கூறியிருந்தார். ஆள் ஒருவரை நீங்கள் இந்திய குடிமகனுக்கி அந்த அந்தஸ்தை அவர்ஏற்று கொள்ளும்வரை நீங்கள் அவரை நாடுகடத்த முடியாது என்பதை அவர் அறிவாரா? சம்பந்தப்பட்ட அந்தஸ்தைக் குறித்த ஆள் ஏற்றுக் கொள்ள வேண்டும்; ஒருவர் விருப்பத்துக்குமாருக எந்த ஒரு நாட்டின் குடிமகனுகவும் நீங்கள் ஒருவரை ஆக்கிவிடமுடியாது. தயவு செய்து அதைத் தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். ஆள் ஒருவர் விண்ணப்பஞ் செய்தாலல்லாது அவரை ஒரு இந்தியக் குடிமகனுக்கிவிடமுடியாது. மாஸ்கோவிலோ மத்திய கொழும்பிலோ முதற் பிரதிநிதி "ஏன் முடியாது?" என்கிருர். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 8வது பிரிவை அவருக்கு வாசித்துக் காட்டுகிறேன்.

திரு. கெனமன்: அவர்கள் அதைத் திருத்தினுல்?

திரு. பொன்னம்பலம்: இந்திய அரசமைப்புச் சட்டம்

(2ம் பக்கம் பார்க்க)


1967
AYES
Mr. G. G. Ponnambalam, Q.C.


1967 1090
AYES
Mr. J. L. Sirisena
Mr. M. Sivasithamparam
Mr. T. Sivasithamparam

1967ம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டம், 1948-ம் ஆண்டின் இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்தைவிட 1000 மடங்கு கொடியது என்றும் இச்சட்டத்தை ஆதரித்ததினல் ஐந்தேகால் இலட்சம் பேரை கட்டாயமாக நாடு கடத்த தமிழரசுக் கட்சி ஒப்புக் கொண்டு விட்டதென்றும் இது தமிழினத்துக்கு மாபெரும் நஷ்டமென்றும் கூறிவருகிருர் திரு. பொன்னம்பலம் இப்படி தமிழரசார் மீது வீண்பழி சுமத்திவரும் திரு. பொன்னம்பலம்—எந்த இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை கொடிய சட்டம் என்று வடபகுதியில் மேடைக்கு மேடை இப்பொழுது தவருமல் கூறிவருகிருரோ அதே இலங்கை இந்திய ஒப்பந்த அமுல்சட்டத்தை 1967ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ந் திகதி பாராளுமன்றத்தில் ஆதரித்து வாக்களித்தார்; திரு: பொன்னம்பலம் மட்டுமன்றி உடுப்பிட்டி, வவுனியா சிவசிதம்பரங்களும் ஆதரவாகவே வாக்களித்தனர்.

இந்த உண்மையை, (தொகுதி 71—எட்டாவது இலக்கம்) ஹன்சாட்டின் 1087, 1090 பந்திகள் அம்பலப்படுத்துகின்றன.

அதை இங்கு அப்படியே போட்டோஸ்டாட் வடிவில் தந்திருக்கிறேம்

சுதந்திரன்
SUTANTIRAN



ஈழத்தமிழர்கள் கண்ட போர்க்களங்கள்:

## தானைத்தளபதியும், துரையும் தமிழ்காக்க நடத்திய போர்!

பருத்தித்துறை தந்த பச்சைத் தமிழ்வீரன்
சரித்திரம் தந்த நல்ல தமிழரில் ஒருவன்...
மறத்தமிழர்க் கிங்கே துன்பமெனில் ஓடிக்
கொதித்தெழுந்து போராடும் கொடுவேங்கை!
தமிழருக்கு குளிர் தென்றல்!
சத்தான தமிழ் வீரர்குடிவாழும்
முத்தமிழ்ப் பருத்தித் துறைமுற்றத்தில்
விளைந்த தமிழ்முத்து—துரைரெத்தினம்
அத்தினம் நிகழ்த்திய போர் நினைத்தால்
இத்தினமும் மெய்சிலிர்க்கும்! இதோ—
யாழ்ப்பாணக் கச்சேரி முன்றிலிலே...
ஓர் புறத்தே...துரைரெத்தினம்!
மறுபுறத்தே அமிர்தலிங்கன்!
ஆட்சியின் காவலாளருடன் போர்புரியும்
காட்சி! தமிழரசு இயக்கத்தின் தனிப்பெரும்
மாட்சி! அமிர்தலிங்கன் தளபதி அன்றோ?
முன் நின்று நடத்துகிறான்' தமிழ்ப் போர்!
கண் என்று நாம் கருதும் தமிழ் மொழிக்கும்
இனத்துக்கும்
புண் என்று வந்த புன்மை தீர்க்க
தமிழரசின் வீரத் தலைவர்கள் ஆடியபோர்
காணீர்! காணீர்!

பருத்தித்துறைப் பட்டணத்தில்... ....

# வாக்காளருக்கு வழிகாட்டும் இரு சின்னங்கள்

பருத்தித்துறைப்பட்டினத்தின் வடமத்தியிலே அமைந்துள்ள அதன் அங்காடியை (சந்தையை) யாவரும் அறிவர். அங்காடிச் சதுக்கத்தின் வடமேற்கு மூலையிலும் அங்காடியின் தென்மேற்குப் புறத்திலும் இரண்டு முக்கிய சின்னங்கள் காணப்படுகின்றன.

ஒன்று உணர்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டும் சுதந்திரச்சின்னம்; மற்றது தமிழராகியநாம் இன்றுள்ள இழி நிலையை அப்பட்டமாக சுட்டிக்காட்டும் அடிமைச் சின்னம்.

இவற்றைப்பற்றி மேலும் விரிவாக விளக்கப்புகின். வடமேற்கு மூலையிற் காணப்படுவது இந்திய சுதந்திரச் சிற்பியும் அறப்போர் வீரரும். அகிம்சா மூர்த்தியுமான அண்ணல் காந்தியடிகளின் சிலையாகும். தியாகத்தின் திருவுருவாகத் திகழ்கிறது இச்சிலை.

அங்காடியின் மேற்கு வீதிக்கு அப்பால் உயரத்தில் காணப்படுவது (சீ. டபிள்யு. ஈ. என்ற) கூட்டுறவுமொத்த விற்பனவு நிறுவனத்தின் சிங்களப் பெயர் பலகைகளா கொட்டை யெழுத்துக்கலான இப்பெயர்ப்பலகை தமிழ்ப்பகுதியில் சிங்களத்தின் மேம்பாட்டைக்குறிக்கும் அடிமைச் சின்னமாகக் காட்சியளிக்கிறது,

இந்த இரண்டு சின்னங்களையும் பார்க்கும்பொழுதெல்லாம், இத்தேர்தலில் பருத்தித்துறையில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களின் நினைவு தான் எண்ண அலைகளில் குத்திட்டு நிற்கிறது.

அண்ணல் காந்தியடிகளின் உருவச்சிலையைப் பார்க்கும் போது. அவர் இந்திய சுதந்திரத்திற்காக சிந்திய இரத்தமும், நடாத்திய சத்தியாக்கிரகப் போராட்டங்களும் அவற்றின் விளைவாகப் பொலிசாரின் அடிதடிக்கு இலக்காகியதும். சிறைபுகுந்ததையும் போன்று தற்போதைய பருத்தித்துறைத் தொகுதியின் தமிழரசு வேட்பாளரான திரு. க. துரைரத்தினமும் தமிழர்களாகிய எமது சுதந்திரத்தையும்உரிமைகளையும் பெறுவதற்காக சத்தியாக்கிரகங்களில் பங்குபற்றி, பொலிசாரின் மிருகத்தனமான தாக்குதல்களுக்கு இலக்காகி சிறை புகுந்த சம்பவங்கள் நெஞ்சத்திரையில் நிழல்விடுகின்றன. உள்ளத்தில் ஒருவகை விபரிக்கமுடியாத உணர்ச்சிகளை எழுப்புகின்றன.

கூ. மொ. வி. நிறுவனத்தின் இராட்சத தோற்றமுள்ள சிங்களப்பெயர்ப்பலகையைப் பார்க்கும்பொழுதெல்லாம், ஒரு தமிழ்ப்பட்டினத்தில், தமிழ்மொழிக்குப்பதிலாக சிங்கள எழுத்துக்கு இவ்வளவு முக்கியத்துவமா? என்ற கொதிப்பும் அடுத்த கணம் தமிழ்க்காங்கிரஸ் வேட்பாளரான திரு. நடராசா அவர்களின் ஞாபகமும்தான் வருகின்றது. ஏன்? தமிழர்களை அடக்க முற்பட்டுள்ள இந்த சிங்கள ஏகாதிபத்தியத்தின் சின்னத்தைத் தாங்கியுள்ள அந்த நிறுவனத்தின் திறப்புவிழாவுக்கு தனிச்சிங்கள அரசாங்கத்தின் அமைச்சரை வரவழைத்து. மாலைசூட்டி வரவேற்றதுமட்டுமின்றி எதிர்ப்புக் காட்டவந்துநின்ற தமிழினத்தின் சுதந்திர வீரர்களை தியாகத் தொண்டர்களைத் தாக்குவதற்கும் உடந்தையாக திரு. நடராசா இருந்தார் என்பதை பருத்தித்துறை மக்கள் எப்படி மறக்கமுடியும்? இந்த எதிர்ப்புபோரில் தான் அஞ்சாநெஞ்சன் வீ. ஏ. கந்தையா பொலிசாரின் குண்டாந்தடி அடிபட்டு காலகதியில் தன் உயிரை இழக்க நேரிட்டது.

நெஞ்சிருக்குமட்டும் இச்சம்பவத்தின் நினைவு பசுமையாகவே இருக்கும்.

இந்த இரண்டு சின்னங்களும் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தலில் பருத்தித்துறைத் தொகுதி வாக்காளர்களுக்கு நிச்சயம் வழிகாட்டியே தீரும். இதில் சந்தேகம் வேறு உண்டா?



அண்மையில் வல்வை ரேவடி கடற்கரை மைதானத்தில் திரு. ச. ஞானமூர்த்தி தலைமையில் நடைபெற்ற தமிழரசுப் பிரசாரக் கூட்டமொன்றில் மக்கள் தொண்டன் துரைரத்தினம் அவர்களுக்கு வல்வை மக்கள் மலர்க்கிரீடம் அணிந்து மகிழ்ந்த காட்சி. மலர் சிரிப்புடன் துரைரத்தினம் காணப்படுகிறார்!

### பொன்னு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

னம்பலத்தின் பிதற்றலுக்கு ஊர்காவற்றுறை நவரத்தினமும் ஒத்தூதி வருகிறார்.

தமிழ் பேசும் மக்கள் அனைவரும் அரசியல் தெரியாத நிர்மூடர்கள் என்ற நினைவில் திரு. பொன்னம்பலம் நடத்திவரும் பொய்ப்பிரசாரத்தை இதோ இன்று சுதந்திரன் தூள் தூளாக உடைத்தெறிகிறது. பொய், பித்தலாட்டம், ஏமாற்று இவைதாம் பொன்னம்பலத்தின் அரசியல் மூலதனங்கள் என்பதையும் இதனல் அம்பலப்படுத்துகிறோம்.

1967ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டம் அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதம் நடைபெற்ற போது அதை ஆதரித்து தமிழரசுக் கட்சியினர் மட்டுமன்றி அரசாங்கக் கட்சியில் அங்கம் வகித்திருந்த தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலமும் நீண்டதோர் உரை நிகழ்த்தினர். அவரதுஉரை 1967ம் ஆண்டு பெப்ரவரி 21ந் திகதி சனப்பிரதிநிதிகள் சபை 'ஹன்சார்ட்'டில் (தொகுதி 71 எட்டாவது இலக்கப் புத்தகம்) 980வது பந்தியிலிருந்து 1007வது பந்திவரை காணப்படுகிறது.

திரு. பொன்னம்பலம், தமது உரையில் இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தில் அணுவளவு கூட கட்டாய நாடுகடத்தலுக்கு இடமில்லையென்பதையும் விரும்பாத எவரையும் நாடுகடத்த இச்சட்டம் இடமளியாதென்பதையும்மிகவும் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் ஆதாரபூர்வத்துடனும் எடுத்துரைத்திருக்கிறார். அவரது அப்பேச்சினை 3ம் பக்கத்தில் பிரசுரித்திருக்கிறோம்.

திரு. பொன்னம்பலம், எந்தச் சட்டத்தின்படி கட்டாய நாடுகடத்தலுக்கு துளியும் இடமில்லையென பாராளுமன்றத்தில் அடித்துக் கூறினரோ அதே சட்டத்தை தான் தமிழரசுக் கட்சியும் ஆதரித்தது.

அதுமட்டுமல்ல — இன்று எந்தச் சட்டத்தை ஆதரித்தது மூலம் தமிழரசுக் கட்சி கட்டாய நாடு கடத்தலுக்கு கைதூக்கிவிட்டது என்று பொன்னம்பலமும் அவரது பக்கவாத்தியங்களும் கூக்குரலிடுகின்றனரோ அதே இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தை ஆதரித்து கைதூக்க திரு. பொன்னம்பலமும் இரு சிவசிதம்பரங்களும் தவறவில்லை. திரு. பொன்னம்பலமும், உடுப்பிட்டி, வவுனியா சிவசிதம்பரங்களும் இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்ததை ஆதாரபூர்வமாக ஹன்சார்டிலிருந்து எடுத்த போட்டோஸ்ராட் படமும் 3ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது—

இதையொட்டி திரு. பொன்னம்பலத்திடம் பின்வரும் கேள்விக்கணைகளை விடுக்கிறோம்.

(1) இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் சட்டத்தில் கட்டாய நாடுகடத்தலுக்கு இடமில்லை என்று பாராளுமன்றத்தில் அழுத்தந்திருத்தமாக கூறிய தாங்கள் வடக்கிலே நின்று கட்டாய நாடு கடத்தலுக்கு தமிழரசார் கைதூக்கிவிட்டதாக பொய்கூறி மக்களை ஏமாற்ற நினைப்பதேன்?

(2) உண்மையில் கட்டாய நாடுகடத்தலுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் இடமிருந்தால், நீங்களும் உங்கள் இரு சீடர்களும், ஏன் அதை ஆதரித்தீர்கள்? ஏன் எதிர்த்து வாக்களிக்கவில்லை?

3 பாராளுமன்றத்தில்ஒன்றும் பாராளுமன்றத்துக்கு வெளியே வேறொன்றும் பேசுவதுதான் யோக்கியமான அரசியலா? கட்டாய நாடுகடத்தலுக்கு இடமில்லையென்று தாங்கள் பாராளுமன்றத்தில் கூறியது பொய்யா, அல்லது கட்டாய நாடுகடத்தலுக்கு கைதூக்கிவிட்டது தமிழரசு என்று வெளியே புறணியளப்பது பொய்யா? ஐயா பொய்யம்பலமே! உமது பொய் அம்பலமாகிவிட்டது: இத்துடன் அடக்கும் உமது வாயை!

### தமிழரசின்...

(1-ம் பக்கத் தொடர்சி)

செய்தது யூ. என். பி. யூ. என். பியுடன் சேர்ந்து பொன்னம்பலமும் பௌத்த பிக்குகளும் எதிர்த்ததால் ப. செ. ஒப்பந்தம் அன்று நிறைவேருமல் போனது,

1960 மார்ச் மாதம் யூ. என். பி. ஆட்சிக்குவந்த போதும், ப. செ. ஒப்பந்த அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக தமிழுக்கு சட்ட அந்தஸ்து தர மறுத்து பொதுத்தேர்தலுக்குப் போய் படு தோல்வியடைந்தது.

அப்படிப்பட்ட யூ. என். பி யைக் கொண்டு 1966ம் ஆண்டு, தமிழை வடக்கு கிழக்கு மாகாணங்களின் நிர்வாக மொழியாக்க சட்ட விதிகள் கொண்டு வந்து நிறைவேற்ற வைத்ததுயார்? தமிழரசுக்கட்சியல்லவா? ஒரு புத்தபிக்குவைச் சுட்டுக் கொன்று, இச் சட்டத்தை யூ. என். பி. கொண்டு வந்த தென்றால்' அது தமிழரசுக் கட்சி கொடுத்த நெருக்கடியாலல்லவா? இது கல்லில் நார் உரிப்பதைவிட பெரிய சாதனையல்லவா?

### மறவர் குலத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திரு. செல்வநாயகம் சிங்கள மொழி திணிப்பை எதிர்த்து அறப்போர் நடத்தி தமிழர்களுக்கு தமிழ் அரசு கோரும் பணியினை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம். மறவர் குலத்தின் பெருமையைக் காத்திடும் உங்களை, உங்களது பணியை நாடே பாராட்டுகிறது. அதற்காக நாங்கள் பெருமையும பூரிப்பும் கொண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

திராவிட முன்னேற்ற கழகம் உங்களுக்கு உற்ற துணை புரிவதோடு, அங்கு வாழும் தமிழ்க் குடி மக்களுக்காக இங்கு போராடி தக்க பரிகாரமும் தேடும்.

(மாலைமணி ஆசிரியத் தலையங்கம்)

### வாக்கு வேட்டையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த அபேட்சகர் உறுதி அளித்துள்ளாரென்று பகிரங்கமாகவே இவர்கள் சொல்லிக்கொள்கிறார்கள்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக வீதி, 194 ஏ, இல்லத்தில் 1970-ம் வருடம் மே மாதம் 21-ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.
ஆசிரியர்: கோவை மகேசன்,